TAMIL NADU PHYSICAL EDUCATION AND SPORTS UNIVERSITY
(Estd. by the Govt. of Tamil Nadu Under Act No.9 of 2005. A State Govt. University)
Accredited with "B" Grade by NAAC

Website : www.tnpesu.org
Email : regtnpesu@gmail.com
Phone No :044-27477906

Vandalur-Kelambakkam Road, Melakottaiyur Post, Chennai – 600 127. Tamil Nadu.

**Dr.V.Gopinath**
Registrar

OP.No:905/YWSD-3/Ph.D/2022 28.02.2022

## Circular

Ref: 1) G.O (Ms) No.3, Youth Welfare and Sports Development (YW2) Department, dated: 15.02.2022
2) Vice Chancellor approval dated: 24.02.2022

I am by direction to inform that the Government of Tamil Nadu has instructed through a Government order cited in Ref(1) that the abstract and key words of the Ph.D thesis shall be translated in Tamil and a soft copy of the same in Ms-word format should be submitted to the "Tamil Virtual Academy". All the scholars shall attach the certificate obtained from "Tamil Virtual Academy" in the thesis before submission. Hence, it is informed that all the research supervisors and scholars must adhere this as a mandatory requirement along with other existing norms at the time of submission of Ph.D Thesis. This Government order comes into effect immediately.

V. G 28/2/2022
Registrar

Registrar
Tamilnadu Physical Education and Sports University
Chennai

Encl: Government order.

To:

1. The Controller of Examination i/c, TNPESU
2. All Head of the Departments / Unit Heads, TNPESU
3. All Principals, Research Centres
4. The Deputy Librarian , TNPESU
5. All Research Supervisors, TNPESU & Research Centres
6. All Research Scholars, TNPESU & Research Centres

905
18 FEB 2022
Chennai-127

SUBMITTED TO VICE-CHANCELLOR
Yes
No

<u>சுருக்கம்</u>

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை – 2021–22 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பு – தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்புகளை தமிழில் தொகுத்து, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக இணையத்தில் வெளியிடுதல் – அறிவுறுத்தல்கள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (இந2) துறை**

**அரசாணை (நிலை) எண்.3** **நாள்: 15.02.2022**
**பிலவ, மாசி – 03**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டவை:**

1. 2021–22 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண்.13, நாள் 31.08.2021.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.9418/வ.செ.2/2021, நாள் 20.10.2021.
3. அரசாணை (நிலை) எண்.5, உயர்கல்வித் (கே2) துறை, நாள் 07.01.2022.

**<u>ஆணை:–</u>**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 31.08.2021 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–22–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.46–இல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு (அறிவிப்பு எண்.13) வெளியிடப்பட்டது:–

> "அனைத்து பல்கலைக்கழகங்களும் அனைத்துத் துறைகளின் முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கங்களைத் தமிழில் தொகுத்து வெளியிடுவதோடு, இனிவரும் காலங்களில் முனைவர் பட்ட ஆய்வேடு அளிக்கப்படும்போது, அவ்வாய்வேட்டின் ஒரு பகுதியாக ஆய்வுச் சுருக்கமும், கலைச் சொல் பட்டியலும் இடம் பெறச் செய்யவேண்டும். இனிவரும் ஆண்டுகளில் ஆண்டுதோறும் பல்கலைக்கழகங்கள்

இத்தகைய தமிழ் ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்பைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு மென் நகலியாக (soft copy – MS word format) அனுப்பி வைக்க வேண்டுமென ஆணையிடப்படும்"

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், அனைத்து பல்கலைக்கழகங்களிலும் முனைவர் பட்ட ஆய்வேடு அளிப்பதற்கான பொதுவான நடைமுறையில் உள்ள விதிமுறைகள் குறித்து தெரிவித்துள்ளதுடன், முனைவர் பட்ட ஆய்வின் பொருண்மையை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையிலும் பயன்பெறும் நோக்கத்திலும் இணையத்தில் வெளியிடுவது இத்திட்டத்தின் நோக்கமென்றும் குறிப்பிட்டு, இதுதொடர்பாக விரிவான கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. மேற்காணும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில் உயர்கல்வித் துறையின் கீழுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அறிவுறுத்தல்கள் உயர்கல்வித்துறையால் வழங்கப்பட்டுள்ளன.

4.அதனடிப்படையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழுள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்களது ஆய்வேடுகளுக்கான ஆய்வுச்சுருக்கத்தையும், அவ்வாய்வில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களின் பட்டியலையும் தமிழ் இணையக் கல்விக்கழகத்துக்கு அளித்து, அதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் அளிக்கப்படும் சான்றினைப் பெற்று இணைக்க வேண்டும் என்ற விதிமுறையை பல்லைக்கழகங்களுக்கான முனைவர் பட்ட ஆய்வேடு அளிப்பதற்கான பொதுவான விதிமுறைகளுடன் சேர்க்க வேண்டும் என தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக பதிவாளரை அரசு அறிவுறுத்துகிறது.

5. இவ்வரசாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்பாட்டிற்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

பதிவாளர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், சென்னை –127.

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை –9.
உயர்கல்வித் (கே2) துறை, சென்னை –9.
மாநில (தணிக்கை–1) கணக்காயர், சென்னை –18.
உள்ளுறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 9.

**நகல்:**
மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9–
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை.9–
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை –9.
இ / கோ.உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/2/22
பிரிவு அலுவலர்
15/2/2022